2016 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய தன்னிகரில்லா முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 4¾ ஆண்டுகளில் பழமைமாறாமல் தொன்மை வாய்ந்த 250 திருக்கோயில்களுக்கு ஓராண்டுக்கு 22.50 கோடி ரூபாய் வீதம் நிதி ஒதுக்கி, இதுவரை 90 கோடி ரூபாய் செலவிடப்பட்டு, அத்திருக்கோயில்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த இரண்டு திருக்கோயில்களும் மிகவும் பழமையானவை. மகாராஜபுரம், கொள்ளிடம் பகுதியைச் சேர்ந்த நேத்ரபாலேஸ்வரர் திருக்கோயில், ஆனைக்காரன்சத்திரம் வேணுகோபாலஸ்வாமி திருக்கோயில் ஆகிய இந்த இரண்டு திருக்கோயில்கள் குறித்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கருணைப் பார்வைக்கு எடுத்துச்சென்று, உடனடியாக பணிகள் தொடங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

52—

வாகன எரிபொருள்

***55654—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் எத்தனாலை எரிபொருளாகப் பயன்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் எத்தனாலை எரிபொருளாகப் பயன்படுத்தி இயக்கும் திட்டம் அரசின்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பரிசீலினையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக 22 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பேருந்துகள் தினமும் இயக்கப்படுகின்றன. நாள் ஒன்றுக்கு 20 இலட்சம் லிட்டர் டீசல் அப்பேருந்துகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. டீசல் பயன்பாடு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், தமிழ்நாடு அரசு போக்குவரத்து நிறுவனம் நஷ்டத்தில் இயங்குவதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்திருக்கிறது.

முற்பகல் 10–40

உலக அளவில் அமெரிக்கா மற்றும் பிரேசில் போன்ற நாடுகளில் 10 விழுக்காடு எத்தனாலைப் பயன்படுத்தி வருகின்றார்கள். இன்றைக்குக்கூட இந்தியாவிலே நாள் ஒன்றுக்கு மூன்று இலட்சம் பீப்பாய் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதன் மூலமாக, அந்நியச் செலாவணி நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. எத்தனால் உற்பத்திக்கு மூலாதாரமாக விளங்குவது கரும்பு மற்றும் மக்காச் சோளம் ஆகும். தமிழ்நாட்டில் 43 கரும்பு ஆலைகள் இயங்கி வருகின்றன. நாள் ஒன்றுக்கு ஒரு இலட்சத்து 60 ஆயிரம் டன் கரும்பு அரைக்கப்படுகின்றது. அதனால், எத்தனால் நமக்கு தாராளமாக, அளவுக்கு அதிகமாக கிடைக்கப்பெற்று வருகின்றது. இதனால் டீசலில் 10 விழுக்காடு எத்தனாலைப் பயன்படுத்துவதன் மூலமாக எரிபொருள் சிக்கனம், காற்றினால் ஏற்படுகின்ற மாசு, அதன்மூலம் மக்களுக்கு வருகின்ற நோய் குறைவதற்கும் காரணமாக அமைகின்றது. புவி வெப்பம் ஆவதற்கு உண்டான கரியமில வாயுவினுடைய அளவும் குறைகின்றது. அதோடு மத்திய அரசும் 10 விழுக்காடு வரைக்கும் இந்த எத்தனாலை டீசல் போன்றவற்றோடு சேர்க்கலாம் என்று அறிவித்திருப்பதனால் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து நிறுவனங்களின் சிற்றுந்து மற்றும் பேருந்துகளில் டீசலோடு எத்தனாலை இணைத்து செயலாக்கம் பெறுவதற்கு உரிய

2016 பிப்ரவரி 17]

நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டுவிட்டார்கள் என்று நினைக்கின்றேன். டீசலோடு எத்தனாலைக் கலப்பதற்கு மத்திய அரசினுடைய அனுமதி இல்லை. பெட்ரோலோடு கலப்பதற்கு மட்டும்தான் மத்திய அரசினுடைய அனுமதி இருக்கின்றது. வெளிநாடுகளில் இதுபோல் இருக்கின்றது என்று சொன்னார். அங்கேயுள்ள பஸ்களில் அதற்கென்று பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட எஞ்சின்கள் பொருத்தப்பட்டு இருக்கின்றன. அதற்கு முன்னோட்டமாக இப்பொழுது மஹாராஷ்டிரா அரசு ஒரு பஸ்சை ஸ்வீடனில் இருந்து இறக்குமதி செய்து, ஓராண்டு காலமாக அது பரீட்சார்த்த முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அதற்குப் பின்னால்தான் மத்திய அரசு அனுமதி வழங்கும். பெட்ரோலோடு மட்டும்தான் எத்தனாலை கலக்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதுமட்டுமல்லாமல் இப்பொழுது டீசல் விலை ரூ.42.93 ஆக இருக்கின்றது. எத்தனால் விலை ரூ.48.50 ஆக இருக்கின்ற காரணத்தினால் விலையும் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அது நமக்கு சரியாக வராது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

53—

கால்நடை கிளை நிலையம்

***61800—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—